05.

மர்னிடக் கும்மி

இராஜரத்தின முதலியார்

ரச அச்சுக்கூடம்

949 [அணா 3

ள்ளை வீதி, சென்னை.

O—,85N,M
N49
68808

மானிடக்கும்மி

காப்பு-வெண்பா. கைப்பொருளு மாவலொடு காய
வலு நீக்கும்பொல்லா, மைப்படியுங் கண்ணியர்கண்
மர்தால்-மெய்ப்படியு, ஞானமுற மானிடர்க்கு நற்
றமிழாற் கும்மிசொல்ல, மோனமருளெங்கானைமுன்.

(கும்மி) ஆனைமுகவ னடிபோற்றி-அருள்
ஆறுமுகவேலவன் தாள்போற்றி
மானைத்தரித்த வனைப்போற்றி-வாலை
மங்கைமனோன் மணி தாள்போற்றி. 1

உலாவிய பெண்களிலே-சிலர்
சாகேடுசெய்வதால் மண்மீதில்
விரும்பிமானிடக் கும்மிசொல்ல-சித்தி
விநாயகன்பொற்பாதங் காப்பாமே. 2

வாலவயதினில் புத்தியில்லாமலே-அர்த
மங்கையர்மோகத்தால் வீழாமல்
வாலிபர்கண்டு தெளியவே-கும்மி
வழங்கினேன்கண்டறி மானிடனே. 3

கும்மியடிபாதே கும்மியடி-நீங்கள்
கூடிமானிடக் கும்மியடி [கள்
அம்மலர்செந்தமிழ் நாவலர்பாதத்தை-நீங்
அண்டிக்கும்மியடியுங்கடி. 4

சின்னவயதினில் கல்விகற்று-ஞானம்
சிறந்தமேலோரை யண்டிமுற்றும்

வின்னமில்லா வுண்மைகண்டு-சுகமுற
விரைந்துதேடுவாய் மானிடனே. 5
வித்தையைக்கற்றுத் தெளிந்துகொண்டால்-எங்கும்
மேலோர்கள்மெச்சுவா ருன்னைக்கண்டால்
முத்தியுமதனுலே வாய்க்குமப்பா-என்
மொழியைக்கண்டறி மானிடனே. 6
எந்தஜாதியா யிருந்தாலும்-கல்வி
எவ்வரசன்சபைப் போனுலும்
நிந்தனைசற்றுமே வாராமல்-அதை
நினைவாய்கற்று மானிடனே. 7
செல்வப்பொருளைச் சதமென் றெண்ணியே-
சீறியொருவரைப் பேசாதே. [நீ
கல்விப்பொருளைச் சதமென்றேநாளும்
கற்றறிவாய்நல்ல மானிடனே. 8
மன்னருங்கற்றோருஞ் சீர்தூக்கி-ஆள்
மன்னரில்கற்றோன் சிறப்புடையோன்
மன்னர்க்குத்தன்னக ரல்லாது-கற்றோர்க்கு
வாய்த்தவிடப்மேன்மை மானிடனே. 9
கற்றுக்கொடுத்த குருபரன்றன்னை நீ
கனவிலுமே மறவாமல்
பற்றிப்பணிந்தா லதைவிடவேறுன
பாக்கியமுண்டோநல் மானிடனே. 10

கற்றது அப்பனே கையளவு நாம்
கல்லாததோவிந்த மண்ணளவு
கற்றதைபே லென்று கொண்டுமனதிலே
கர்வப்படையாதே மானிடனே. 11

ஆகமசாஸ்திர நூலைப்படி - அதில்
அடங்கியபொருள்களைக் கண்டுபிடி
மோகம்விளைக்கும் பொல்லாத நூல்களை
மூலையிற்றள்ளுவாய் மானிடனே. 12

கள்ளுசாராயம் குடியாதே-பின்
கஞ்சாவெறியால் மயங்காதே
உள்ளமயங்கிடும் கண்ணுஞ்சிவந்திடும்
ஓட்டாண்டியாகுவாய் மானிடனே. 13

அல்லும்பகலு மொழியாவெறியாலே
ஆனந்தபாட்டுகள் வந்திடுமே
நல்லதென்றே யெண்ணிக் கொள்ளாதேமிக
நையாண்டிசெய்குவார் மானிடனே. 14

வார்த்தைகள் குளறிடும் வாய்துநாறிடும்
வம்பானவார்த்தைகள் பேசச்சொல்லும்
பார்த்தவர்கெட்ட குடிகாரனென்றுனைப்
பகிரங்கமாய்ச்சொல்வார் மானிடனே. 15

கொஞ்சம்கொஞ்சமாய் குடித்திடுவாய்-பின்
கூடும்பொருளை யழித்திடுவாய்

மிஞ்சிகடன்களும் வாங்கிடுவாய் நல்ல
மேனிமெலியுமே மானிடனே. 16
நித்தம்நினைப்பாக வேயிருக்கும்சற்று
நேரம்குடியா திருந்துவிட்டால்
பித்துபிடித்தவன் போலிருக்கும்கெட்ட
பிரமையுண்டாகுமே மானிடனே. 17
கண்டபொருளை யடகுவைப்பாயேயுன்
கையில்வருவதை மோசஞ்செய்வாய்
சண்டாளமானவெறி செய்துவிற்றிடுஞ்
சர்ப்பனைகேளீரோ மானிடனே. 18
மேடுபள்ளமென்று காணாதுகெட்ட
மூத்திரநரகல் தோணாது
சாடுந்தடுமாறி யுள்ளூரில்வீழ்ந்து
சவம்போல்கிடப்பாயே மானிடனே. 19
தள்ளாடித்தத்தி நடக்கச்சொல்லும்வீணில்
சண்டைகள்போடவும் தூண்டிவிடும்
தவடையிலடித்து டாணாவில்கொண்டுபோய்
தண்டனைசெய்திடும் மானிடனே. 20
பற்றியிழுத்து உதைத்து அடித்திடப்
பண்ணாதெல்லாம்செய்யப் பண்ணுவிக்கும்
மற்றுநாள்போலீசில் தெண்டம்போடுவித்
வதைக்கும்கண்டறி மானிடனே. [தூ

நெஞ்சுலர்ந்திடும் மூளைவறண்டிடும்
நேசமும்பாசமு மற்றுவிடும்
பஞ்சையாயடங்குமே பேசச்செய்யுமுந்தன்
பவுசுபோய்விடும் மானிடனே. 22
அசுரர்குருவான சுக்கிராச்சாரி
ஐயோமதுவை குடித்ததனால்
நசியவயிறு கிழியலானதை
நாடெங்கும்சொல்லுவார் மானிடனே. 23
இத்தியாதிதுன்டங்க ளெல்லாமனதில்
ஏதும்பிரயோஜன மில்லையப்பா
சுத்தமதுவை நிறுத்திவிட்டுநெய்யும்
துண்டங்கண்ட நீதின்பாய் மானிடனே. 24
ஆணுவமாகத் திரியாதேசூது
ஆடுமிடந்தனில் போகாதே
தோணவேகற்று நீகொள்ளாதேயுன்
தொல்லையைக்கேட்பாயே மானிடனே. 25
பக்கத்தில்நின்று பாராதேசொற்ப
பந்தயங்கட்டியு மாடாதே [ல்லா
சொக்கப்பணஞ்சில தோர்த்துவிட்டாற்பொ
ரோஷங்களாகுமே மானிடனே. 26
விட்டபணத்தைப் பிடிக்கநாடியப்போ
மின்னும்பின்னும்வைத்து ஆடிடுவாய்

கோடிபணத்தை யிழுத்துக்கொள்ளும்கெட்[ட
பேய்போலலேவாயே மானிடனே.
வீடுநிலங்க ளடகுவைப்பாய்பின்பு
வித்துமிருக்க விடமறியாய்
ஆடுமாடாதியும் தோர்த்திடுவாய்பொல்லா
ஆசையொழித்திடு மானிடனே. 28
தங்கநகைகளைத் தோர்த்தாலுபதேவி
தாலிசரட்டையும் தோர்த்தாலும்
மங்கிடவஸ்திரந் தோர்த்தாலும்சூதை
மறக்கப்போகாதே மானிடனே 29
எவ்வளவுபணம் வைத்தாலும் ஆட
ஏக்கமுந்தூக்கமு மில்லாமல்
அவ்வளவுபணந் தோர்த்திடி னுங்கடன்
ஆரையுங்கேட்டாயே மானிடனே. 30
கடன்கொடுக்கவே நாடார்களுனைக்
கண்டவர்பேசவு மாட்டார்களே
திடமுடன்பெட்டி தானுடைத்துப்பொருள்
திருடச்சொல்லுமே மானிடனே. 31
பெட்டியுடைத்துத் திருடச்செய்யுமதை
போலீசார்கண்டு பிடிக்கச்செய்யும்
கட்டியடித்து விலங்கிட்டுவேலையில்
கஸ்திபடச்செய்யும் மானிடனே. 32

தோற்றிடும்போதில் வேர்த்திடுமேமுகம்
தோன்றியகண்ணுந் தெரியாது
ஆச்சரியமாகவே வஸ்திரங்கள்வைத்து
ஆடிடச்செய்யுமே மானிடனே. 33
நாடாண்டதருமனும் நளனுமிச்சூதாலே
நாடுநகரமும் தோற்றுவிட்டு
காடேகதியாயலைந்தகதைகளைக்
காதினுல்கேட்டறி மானிடனே. 34
சூதினுல்கெட்டவர் மெத்தவுண்டுஅந்த
துன்பத்துக்கிடம் வையாமல்
சூதைவிலக்கென்று ஔவைநீதிசொன்ன
சொல்லையும்நம்புவாய் மானிடனே. 35
எல்லாத்தொழில்களும் செய்திடலாஞ்சற்
ஏறக்குறைய நடந்திடலாம் [றே
பொல்லாதசூதை விரும்பினுல்மண்மேல்
போகுமேவாழ்வெல்லாம் மானிடனே. 36
கன்னிமயக்கத்தில் துள்ளாதேகெட்ட
கஞ்சாமதுவையும் கொள்ளாதே [தே
அன்னீதமாய்பிறர் கைப்பொருள்கொள்ளா
அறிஞரையண்டு மானிடனே. 37
மாதர்வலைக்குள்ளே செல்லாதேகெட்ட
வார்த்தைகளைப்பேசி வெல்லாதே

பாதகிதோதகி போதனைகளெல்லாம்
பாடுவேன்கேட்பாயே மானிடனே. 38

உண்மையுங்கற்பையுங் காத்துநடக்கின்ற
உத்தமமாதரை நீக்கிவிட்டு
புண்ணாகிப்பொல்லாத நோயைத்தருகின்ற
மொய்குழலைநாடாதே மானிடனே. 39

கூழுக்குடபில்லாத பாதகியுங்கஞ்சி
குடிக்கவேடியில்லாத மூதேவியும்
சந்தோஷப்படுத்தும் நங்கைகளும்மிக
சண்டியுங்கள்ளியும் மானிடனே. 40

கூலிக்குநெற்குத்தும் பேச்சிகளும்சாணம்
கொட்டைக்கூடை தூக்கும் பரச்சிகளும்
தாலியிழந்த தறுதலைமுண்டையும்
சப்பையுந்தொப்பையும் மானிடனே. 41

கொண்டவனைவிட்டுப் போனவளும்கெட்ட
கூத்திதனத்தால் பிறந்தவளும்
கட்டிக்கச்சேலை யற்றவளுஞ்சேர்ந்த
நஷ்டமேகண்டறி மானிடனே. 42

அங்காடிவிற்றே யலைந்தவளுஞ்சுப்பல்
அள்ளித்தலைமொட்டை யானவளும்
பங்கமாய்க்கா தறுந்தவளுந்தலை
பம்பையும்ஜம்பையும் மானிடனே. 43

இப்படிக்கொத்தவளே மாந்தோர் முன்னளி
என்னைப்போலமேன்மைப் பெண்ணில்லையென்று
செப்பிச்சிங்காரம் நடிக்கின்றநேர்மையைத்
தீட்டுகிறேன்கேளாய் மானிடனே. 44
மஞ்சள் குளித்து மினுக்கிடுவாள்மிக
மணங்கள் பூசிக் குலுக்கிடுவாள்
கொஞ்சியேமுத்தந் தந்திடுவாள் கெட்டக்
கொள்கையைக்கண்டறி மானிடனே. 45
மல்லிகைமுல்லை யணிந்திடுவாள் சிறு
வாட்டமாய்பொட்டுமே யிட்டுக்கொள்வாள்
மெல்லியசல்லா வுடுத்திக்கொள்வாள்மிக
வேடிக்கைகாட்டுவாள் மானிடனே. 46
கஸ்தூரிகுங்கும பொட்டிடுவாள்பொல்லா
காசுமேலாசையாய்ச் சேர்த்திடுவாள்
அஸ்தங்கள்வீசி நடந்திடுவாள்சற்றும்
யார்க்குமஞ்சிடாள் மானிடனே. 47
மேலுக்குச்சீலை போட்டுக்கொண்டுமயிர்க்
கோலினுல்கூந்தலின் சிக்கறுப்பாள்
சங்கையில்லாமலே கோடாலிமுடியைச்
சம்பிரமாய்போடுவாள் மானிடனே. 48
பல்லுக்குப்பற்கரை தீட்டிக்கொள்வாள்மிக
பாக்கும்வெற்றிலையும் போட்டுக்கொள்வாள்

சொல்லுக்குசொல்லு நகைத்திடுவாளுன்னை
சுற்றுவாள் நத்துவாள் மானிடனே. 49
நித்தியம்ஸ்நானம் செய்திடுவாள்சற்று
நேரமொருசேலை கட்டிக்கொள்வாள்
எத்திப்பறிக்க வுலாத்திடுவாளையோ
ஏமாந்துபோகாதே மானிடனே. 50
கண்ணுக்குமை தீட்டிக்கொள்வாள் மெய்யிற்
கதம்பம்பலவுமே பூசிக்கொள்வாள் [நீ
எண்ணுங்கருத்தை முடித்துக்கொள்வாள்
ஏங்கித்திரியாதே மானிடனே. 51
சொந்தம்பாராட்டியே பேசிடுவாள்யாரும்
தூற்றினாலும்தீரங் கொண்டிடுவாள்
எந்தவிதமும் மயக்கவேபார்ப்பாளே
யிந்திரசாலிநல் மானிடனே. 52
கண்ணினாற்சாடைகள் காட்டிடுவாள் வலியக்
கையைப்பிடித்து மிழுத்திடுவாள்
எண்ணமல்சும்மா யிருந்தாலுமுனக்
கெண்ணம்வரச்செய்வாள் மானிடனே. 53
அம்மாளக்காளென்று கூப்பிடினும்பாவி
அண்டிபரிகாசம் செய்திடுவாள்
சும்மாயடிக்கடி வந்திடுவாளுன்னை
தொல்லைக்குள்ளாக்குவாள் மானிடனே. 54

மாராக்குசீலே போட்டுக்கொண்டவள்
மங்கையைப்போலவே தானிருப்பாள்
பேரான பெரியோரைக்கண்டால்
பேசாமலிருப்பாள் மானிடனே. 55

கடலினுழத்தைக் காண்லாமேசிறு
கருமணலையு மெண்ணலாமே
நடைகுலுக்கி நடக்கின்றநீலியை
நாமறியப்போமோ மானிடனே. 56

காட்டானைசிங்கம் கரடிபுலிநாகம்
கள்ளர்குறவரை நம்பிடலாம்
பூட்டமுள்ளலிம் மாதரைநம்பினல்
போகுமேபாக்கியம் மானிடனே. 57

தம்பியண்ணனென்று கூப்பிடுவாள்பொழு
தந்திப்பட்டாலோ புருஷனென்பாள்
நம்பிபணத்தைக் கொடுக்காதேகெட்ட
நாரியைநம்பாதே மானிடனே. 58

எங்குமுடைமையிரவல்வாங்கிபதி
னெட்டாய்பேருக்குப் படைக்கவென்று
சிங்காரச்செய்துமே முண்டைகள்கூடின
சிலப்பைக்கண்டறி மானிடனே. 59

ஏழைபோல்பாசாங்கு செய்திடுவாள்சற்றும்
ஏற்காதவார்த்தைகள் பேசிடுவாள்

தாழ்மையைக்காட்டியே காப்பாற்றுவ ரென்
சாற்றுவாள் நம்பாதே மானிடனே. 60
ஆசையும்பாசமும் கொண்டேனென்பாளெ
ஆதரிக்கவேண்டும் சாமியென்பாள் [ன்னை
காசையறுக்க வழிதேடும் நீவியை
கண்டறிவாய் நல்ல மானிடனே. 61
வேசிகளைப்போலே காசுபணங்களை
வேண்டேனுன்றன்மேற் பொல்லாத[ருனை
ஆசையால் நொந்திதோ வந்தேனேயென்
அண்டுவாள் கண்டறி மானிடனே. 62
கைவசமாக்க மருந்திடுவாள் மிக்க
காமங்கொண்டதாய் நடித்திடுவாள்
பையவேகாசை யிழுத்துப்பிணமாக்கும்
பட்டிக்குத்தப்புவாம் மானிடனே. 63
செத்தால்பிரிவேனே யல்லாமலுன்னைச்
சேர்ந்துசுகம்வேறு வேண்டாமென்பாள்
எத்தாகப்பேசியே கொள்ளையடிப்பாளே
ஏமாந்துபோகாதே மானிடனே. 64
பாயாசம்லட்டுங் கொடுத்திடுவாள் பழம்
பாலும்பழங்களுந் தந்திடுவாள்
ஆயாசம் நீங்கிடச் செய்வாள்மிக
அன்புபாராட்டுவாள் மானிடனே. 65

தட்டிக்கொடுத்திருகால் பிடிப்பாள் நன்றாய்
சாப்பிடுமேனி யிளைத்ததென்பாள்
தட்டிப்பறிப்பாளே கைப்பொருளற்றாலோ
சாருவாள்வேறிடம் மானிடனே. 66
காலுவலிக்குதென் றேயுரைத்தாலத்தான்
கண்ணுறுவென்றே யழுதிடுவாள்
மாலைப்பொழுதில் மினுக்கிப்பிறரை
மயக்கப்பார்ப்பாளே மானிடனே. 67
என்றனைவிட்டுநீ வேறொருமாதரை
எண்ணவும்போகவும் கூடாதென்பாள்
உன்றனைவிட்டுக் கனவிலும்மற்றோரை
எண்ணேனென்பாள்பாராய் மானிடனே. 68
தந்திரமாய் நாம் தேடும்பணங்களைச்
சண்டாளிகையினிற் சிக்கிக்கொண்டால்
அந்தரதேவதை வந்துரைத்தாலும்
அள்ளித்தெளிக்காளே மானிடனே. 69
பாடுபட்டுத்தினந் சேர்ந்தபணமெல்லாம்
பாதகிகையினிற் சிக்கிக்கொண்டால்
கூறுமொழிதப்பிப் போடாவாடாவென்று
கூசாமல்பேசுவாள் மானிடனே. 70
காசெல்லாமழிந்துப் போனாலேயுன்னைக்
கண்டபடிதிட்டுவாள் பலபேர்கள்

மூத்தோர்சொற் கேட்பாயேகெட்ட
மோசக்காரியைநம்பாதே மானிடனே. 71
சாற்றும்பழமொழிப் போலேபெண்கள்
சம்பத்தைக்கண்டுமே நில்லாமல்
புதையலொத்த புருஷரைக்கண்டால்
புத்தியைக்காட்டுவாள் மானிடனே. 72
பணமுள்ளவனைத் தேடுவாளேகுஷ்ட
பறையனாகிலும் கூடுவாளே
பிணங்களைக்கூடவுஞ் சேருவாளேபொல்லா
பேச்சியைக்கண்டறி மானிடனே. 73
சாதிமுறைமை கிடையாதுபணம்
தந்தவனைத்தெய்வ மென்றுரைப்பாள்
நீதிநெறியில்லா மாதரைநெஞ்சினில்
நினைக்காதேசற்றும் மானிடனே. 74
எங்கெங்குமாப்பிள்ளை வைத்திருப்பாள் நீ
ஏனென்றுகேட்கவுங் கூடாது
மங்கையிடம்நீ பேசக்கண்டாலுன்னை
மாட்டுவாளோட்டுவாள் மானிடனே. 75
விட்டுப்பிரிந்திடமாட்டே னென்பாள் நீயும்
மேவியேவருவதா வென்றனையே
தொட்டுக்கொடுவென் றுசத்தியங் கேட்கின்ற
தோஷியைநம்பாதே மானிடனே. 76

சத்தியப் சண்டைக்கு யச்சப்படாத்தயிர்
சாதமென்றேவிளை யாடிடுவாள்
உத்தமியென்று நம்பாதேவிட்டு
ஒழிக்கத்தேடுவாய் மானிடனே. 77
கொடுத்தபணத்தை மறைத்திடுவாள்கடன்
கொடுக்கச்சொன்னதை யில்லையென்பாள்
அடுத்துக்கெடுத்து விடுத்திடும்நீலியை
அண்டாதேசற்றும்நீ மானிடனே. 78
வேசிக்குகாசுமே லாசையல்லால்நல்ல
மேன்மைப்புருஷர்மே லாசையில்லை
தோஷிமேலாசை புருஷர்க்குண்டுவீணில்
தொல்லைப்படுவாயே மானிடனே. 79
பெற்றோரும்பெண்டிரும் வாதைப்படவுந்தன்
பெண்ணும்பிள்ளைகளும் துன்பப்பட
உற்றோருமற்றோரும் கவ்விப்பட நீயும்
ஊருக்கழிக்காதே மானிடனே. 80
பெண்ணுக்குற்றது சொல்லாதேசொன்னாற்
பேயோடுமாடிய கூத்துப்போலாம்
கண்ணுக்குக்கண்ணா யிருந்தாலுமுள்ளக்
கருத்தைச்சொல்லாதே மானிடனே. 81
அற்பசுகத்திற்கே யாசைப்பட்டுவீணில்
ஆஸ்தியெல்லாம் தோற்றுவிட்டு

அற்பனைப் போலே யலைந்ததை
அறிவால் கண்டறி மானிடனே. 82
எட்டிப்பழுப்பா விம்மாதராசைகள்
எண்ணிப்பார்த்தால் வெகுசள்ளையப்பா
ட்டுப்பிரியாக் கலியர்ணமாதரை
மேவுவாய்சற்புத்தி மானிடனே. 83
அக்கரைக்கிக்கரைப் பச்சையென்றேஆடு
அங்குமிங்குமே யோடுதல்போல்
தக்கப்பணமுள்ள பேர்களைமேய்ந்திடும்
சண்டாளியைத்தள்ளு மானிடனே. 84
பல்லுவிழுந்த கிழவிஐயோசிறு
பையனைமாப்பிள்ளை யாகக்கொண்டு
அல்லும்பகலுஞ்சிங் காரஞ்செய கினைறதை
அறியாயோசற்று மானிடனே. 85
கெட்டநடத்தை யுடையவள்செய்கைமை
கேட்கிலையோகண்ணுள் பார்க்கிலையோ
மட்டறுமோசங்கள் செய்திடுவாளையோ
வம்பறச்சொன்னேனே மானிடனே. 86
பாவிலேசத்தியஞ் செய்திடுவாளுண்ணும்
சாதத்தின்மீது மடித்திடுவாள்
கோயிலிற்சென்று முறுதிச்சொல்வானதை
கொஞ்சமும்நம்பாதே மானிடனே. 87

கண்டையைக்கோர்த்து விரலைப்பிடிப்பதை
கண்டிலையோகண்ணுற் பார்த்ததில்லையோ
உண்டைபருந்தாலே மயங்கிமூளைபை
உண்ணுவாள்கண்டறி மானிடனே. 88
மெத்தநகையெனக் கிட்டாலேவுன்னை
மெச்சுவார்பார்ப்போரும்கேட்போருந்தான்
செத்தால்கழட்டி யெடுத்துகொள்ளென்று
செப்புவாள் நம்பாதே மானிடனே. 89
கம்மல்சிமிக்கையும் வேணுமென்பாள் பீலி
காலாழிகாப்புகள் வேணுமென்பாள்
ஜிம்மெட்டிகை வேணுமென்பாளதைச்
செய்யாவிடி லுண்ணுள் மானிடனே. 90
அய்யாவேகொப்புஜிமிக்கையென்பாளெங்க
அத்தானேமூக்குத்தி நத்துவென்பாள் [ள்
கையிற்குத்தங்க வளையலென்பாளதைக்
கண்டுதெளிவாயே மானிடனே. 91
கண்டசரப்பில்லை தாய்த்துராங்கடி
கனத்தசந்திர ஆரம்கட்டி
தண்டைகொலுசுகள்வேணுமென்பாளதை
தாராவிடில்பழி மானிடனே. 92
கொண்டை மயிர்மாட்டி வேணுமென்பாள்
கெட்டிபாதசரஞ்செய்யமென்பாள் [வெள்ளி

கண்டுகேட்டதை வாங்கிக்கொடாவிட்டால்
கத்துவாளேசும்மா மானிடனே. 93
கையிற்குவங்கி செய்யுமென்பாள் நல்ல
காதுக்குநல்முத்து வேணுமென்பாள்
செய்துகொடாவிடில் வேறுபுருஷனைச்
சேர்ந்துகைக்கொள்ளுவள் மானிடனே. 94
சிங்கமுகத்தோடா வேணுமென்பாளென்ற
சீமானேகோமானே யாழியென்பாள் [ன்
தங்கச்சரடுகள் வேணுமென்பாளதைத்
தாராவிடில்பேசாள் மானிடனே. 95
கல்லிழைத்தநகைவேணுமென்பாளென்றன்
கர்த்தாவேநல்லதாய் வாங்குமென்பாள்
பல்லையுங்காட்டி பசப்புவாள் சொல்லைநீ
பக்ஷமென்றெண்ணாதே மானிடனே 96
பட்டுப்புடவைகள் வேணுமென்பாள்குதிரை
பந்தயம்பார்க்கலாம் வாருமென்பாள்
கட்டிமுத்தமிட்டுமண்ணிலுன்னைப்போலே
காமனுண்டோவென்பாள் மானிடனே. 97
வர்னவர்னசோலைவேண்டுமென்பாள்சீமாட்
வாங்கும்ரவிக்கைகள் தைக்கவென்பாள் [டி
சொன்னபடியப்போ கேட்காவிட்டாலவள்
தூற்றிடுவாளுன்னை மானிடனே. 98

மெத்தைத்தலையணை வேணுமென்பாள் நல்ல
மேவியகட்டிலும் வாங்குமென்பாள்
பத்தாவேதம்பூரு வாங்குமென்பாளிவள்
பாரீரோசொகுசை மானிடனே. 99
அண்டாவுஞ்செப்புக்குடங்களென்பாளிவை
யல்லாமல்செப்புத் தவலையென்பாள் [யர்
குண்டான்மூக்குசட்டிலோட்டாவென்பாளு
குத்துவிளக்கென்பாள்மானிடனே]ள்பணம்
ஆடென்றுமாடென்றுஞ்சேர்த்துசொல்வா
ஆனையட்டுங்கையில் பார்த்துக்கொள்வாள்
வீடென்றுமச்சென்றுஞ்சேர்த்துக்கொள்
வேசியுமென்பாள் மானிடனே. [வார்குல
பெற்றதாய்தந்தைக்குச் சேலையென்பாளென்றென்
பெண்ணுக்குச்சித்தாடை காப்புமென்பாள்
உற்றார்க்குநல்லவிருந்துசெய்யென்றுன்னை
ஓட்டாண்டியாக்குவாள் மானிடனே. 102
கைப்பொருளெல்லாம்கரைந்துபோதாமல்
கடன்வாங்கித்தரவும் பற்றிக்கொள்வாள்
மைவிழிவேசியுமொப்பாகாளோயிவள்
வல்லமைபாராய் மானிடனே. 193
வாங்கியகடன்கள் தீராவிட்டாலையோ
வாரண்டுசம்மனும் வந்துவிட்டால்

பாங்குசெய்வாளென் றெண்ணுதேயுந்தன்
படுக்கையைக் ராட்டுவாள் மானிடனே. 104
இத்தனை செல்வம் நீ தந்தாலும் ஐயோ
என்ன தந்தானென்று கைமுறிப்பாள்
செத்தாலும்கற்புள்ள க்கலியாணமாதர்மேல்
சித்தத்தைப்பாராட்டு மானிடனே 105
காசும்புகழையுந் தோர்த்துவிட்டுப்பெருங்
கட்டியும்புண்ணையும் வாங்கிக்கொண்டு
நாசமடையவே பாராதேயென்னுளும்
நல்வழிசாருவாய் மானிடனே. 106
காச்சலிருமலும் வந்திடுமே கொடும்
கண்டமாலைசூலை மேலிடுமே
கூசிடாக்குடி கேடியினுசையைக்
கொள்ளாதேயற்று நீ மானிடனே. 107
வீரம்பூரம்ரசந் தின்னவோய்ந்திடும்
வீங்கியேகால்கையுஞ் சோர்ந்துவிடும்
சோரம்போகாதே நீ கற்புள்ளகன்னியை
சோபனஞ்செய்குவாய் மானிடனே. 108
நீர்க்கடுப்பும் வள்ளைக் கண்டிடுமே மிக
நெஞ்சமெல்லாம்வாரி யுயர்ந்திடுமே
பார்மீதில்குச்சு நாய்களின்பாசத்தைப்
பாழாக்குவாய் திவ்ய மானிடனே. 109

தம்மைவிட்டுபோக லாதிருப்பாளவள்
நாளெங்குமாப்பிள்ளை வைத்திருப்பாள்
இந்தவிதஜால மறிந்தவற்கெப்போதும்
ஏமாந்துபோகாதே மானிடனே. 110
மாதரைத்தொட்டிட லாகாதேதொட்டால்
வம்புவழக்குகள் நேர்ந்திடுமே
நீதியில்லாதெண்டனை வந்திடுமேயதை
நீக்குவாய்சற்புத்திர மானிடனே. 111
பாடுபட்டுசேர்த்துப் பொன்னையெல்லாமிந்
தட்டிக்குத்தோர்த்துகடையனைப்போல் [தப்
நாடுசிரிக்க வலைவதுஞாயமோ
ஞானஞ்சிறந்தால் மானிடனே. 112
கண்டபடியெல்லாம் பேசிடுவாள்மிக
காரியுமிழ்ந்துமே ஏசிடுவாள்
வண்டனேயுன்னைச் செட்டேனென்பாளந்த
வப்பியைத்தள்ளுவாய் மானிடனே. 113
கண்ணாலேகண்டால முறைமைசொல்வா
காணவிடத்தினின் பரைச்சொல்வாள் [ளுன்னை
எண்ணுக்கனவிலுமிம் மாதராசைசதம்
ஏதுக்குதவுங்காண் மானிடனே. 114
வாங்கள்போங்களென் றுபேசிடுவாள்பணம்
வந்தபட்டுங்கையில் சிக்கிக்கொண்டால்

O—185N, M

தூங்கடா நேஞ்சாதிப் பயலேமிகு
சோம்பனேயென்பாளே மானிடனே. 115
மூத்தவளோடுநீ சேராதேபொல்லா
மூதேவியுன்னைத் தொடர்ந்துகொள்வாள்
ஆத்திரங்கொண்டுநீ பேசாதேமானிடனே
ஆயுளுங்குன்றுமே மானிடனே. 116
தாய்போலேமாதரைத் தேடாதேதம்பி
தமையன்பெண்டோடுஞ் சேராதே
நாய்போலேநாடியலையாதேபொல்லா
நமன்கொண்டோடுவான் மானிடனே. 117
முண்டைகளோடுநீ கூடாதேகூடிடில்
முன்னே நில்லாளே திருச்சீதேவி
கண்டவிடமெல்லாம் போகாதேபோனால்
கண்டார்நகைப்பார் மானிடனே. 118
ஒருவன்பெண்டைநீ நத்தாதேமனம்
ஓடுமிடத்தினில் நாடாதே
[illegible]ருஞ்சிறக்கவேயெந்நாளும்பெரியோர்கள்
செப்புவதைக்கேட்பாய் மானிடனே. 119
மையல்கொண்டொருவன்பெண்டிரைஐ
மருவினால்வருந் துன்பமதை [யோ
ஐயர்திருவள்ளுவர் சொன்னகுறளையும்
ஆராய்ந்துபாராய்நீ மானிடனே 120

மாதர்கள்பேச்சை நீ கேளாதேகேட்டு
மண்ணிலலைந்தோர் பலருண்டு
சீதையின்சொல்லாலே ராமன்பின்னேகிய
செய்தியைக்கண்டறி மானிடனே. 121

சந்திரன்கெட்டதும் பெண்ணாலேதேவ
தாருகனைவிட்டதும் பெண்ணாலே
இந்திரன்தேகமுழுவதும் விண்ணமா
யெய்ததும்பெண்ணாலே மானிடனே. 122

ராவணன்கெட்டதும் பெண்ணாலேகொடிய
ராக்ஷதர்பட்டதும் பெண்ணாலே
பாராண்டவல்ல திரியோதனனியும்
மாண்டதும்பெண்ணாலே மானிடனே. 123

கேவிலன்கெட்டதும் பெண்ணாலேதவம்
கோசிகன்விட்ட பெண்ணாலே
ஆவல்தவம்செய்த பத்மாசூரன்
அழிந்ததும்பெண்ணாலே மானிடனே. 124

மந்திரகிரிதனை மத்தாய்கொண்டுகடல்
வானரசுரர் கடையயிலே
விந்தையசுர ரமிர்தத்தின்பங்கையும்
விட்டதும்பெண்ணாலே மானிடனே. 125

சுந்தோபசுந்தரர் மண்டையுடைந்ததும்
தோற்றரூவர்பிள்ளை யானதுவும்

அந்தமுள்ளகீசகன் வீமன்கையாலே
அற்றதும்பெண்ணாலே மானிடனே. 126
யுகமழிவதும்பெண்ணாலே கர்ணன்
உடலழிந்தது பெண்ணாலே
பங்கமழிவதும்பெண்ணாலே யதை
பற்றிநீக்குவாய் மானிடனே 127
சண்டையும்தண்டமும் பெண்ணாலே நத்து
தட்டுவெட்டுதிட்டும் பெண்ணாலே
மண்டையுடைவதும் தூக்கிலேநிற்பதும்
மங்கையாலல்லவோ மானிடனே. 128
எத்தனை பேர்களோ பெண்ணாலேகெட்டது
எண்ணியெழுத முடியாது
பத்தினியாகிய கலியாணமாதரின்
பட்சத்தைபாராட்டும் மானிடனே. 129
கலியுகத்தைமுடிக் கலேர்க்கபெண்கள்
கன்னியின்வலேதனில் சிக்காமல்
புலியைக்கண்ட பசுவைப்போலேதப்பி
போகவேபார்ப்பாய் நல்மானிடனே. 130
மாதர்நடக்கையைச் சொன்னதுயல்லாமல்
வந்திடுந்தீங்கையும் நன்குறைத்தேன்
பாதகியாசையை நீக்கி சிவதுதி
பண்ணுவாயெப்போதும்மானிடனே. 131

பாவிகழிக்கும்பொருளெல்லாஞ்சேர்த்து
பாதையிலிடஞ்ச லில்லாமல்
கோயில்குளங்களைக் கட்டிவைத்தாலாகும்
கொண்டாடுவாரேநல் மானிடனே. 132
சிந்தைவருந்திப் பொருளைத்தேடியிந்தச்
சீர்கெட்டமாதர்க் கழிக்காமல்
நந்தவனங்கள் குளங்களையாக்கினல்
நற்பதவிதரும் மானிடனே 133
சத்தியந்தப்பா திருந்தபெரியோரும்
தானதருமங்கள் செய்பவரும்
செத்துமவர்பேரைச் சாகாதவர்போல்,
செப்புகிறூரேபார் மானிடனே. 134
மோசம்நாசஞ்செய்து பணங்களைமிக
மொத்தமாய்த்தேடிப் புதைத்தாலும்
பாசங்கொண்டுநமன் வருங்காலத்தினில்
பாழாகுமேயறி மானிடனே. 135
ஆடுமாடுமாச்சு வீடென்றுயெப்போதும்
ஆசைகொண்டு காலம்போக்காதே
கூடுவிட்டேயுயிர் போவதுநீர்மேற்
குமிழிபோலாகுமே மானிடனே. 136
சித்திரமாகவே மெத்தைவீடுகட்டி
செழிப்பாய்ஜம்பமாய் வாழ்ந்தாலும்

சத்தியமானயமன் வருங்காலத்தில்
ஐம்பமுதவுமோ மானிடனே. 137
கட்டில்மெத்தையில் சொகுசாகநித்திரை
காலமெல்லாங்கண்ட விச்சடலம்
துட்டவெமதூதர் வருங்காலத்தில்ரோகம்
தூங்குவதெவ்விடம் மானிடனே. 138
பத்துகட்டுவீடு கட்டினுலுமிகப்
பாலும்பழங்களை யுண்டாலும் [ம்
செத்துப்போனுலுன்னைகொண்டுபோகுமிட
சேர்ந்துபாராய்நல் மானிடனே. 139
ஏதேதுவல்லமை செய்தாலும்புகழ்
எங்கும்பரவவே வாழ்ந்தாலும
கோதகப்புண்ணியம் செய்யாதமாந்தரைத்
தொந்தரைசெய்வான்நமன் மானிடனே.
துள்ளினமாடுபொதி சுமக்காதென்று
சொல்லும்பழமொழி கேட்டிலையோ
துள்ளலைநீக்கிநீ வள்ளலைப்போக்கினுல்
துன்பந்தவிர்ப்பாய் மானிடனே. 141
எத்தனைகால முயிரோடிருந்தாலும்
இறப்பது நிச்சயமாகையினுல்
நித்தியவானந்தச் சுகத்தைப்பெறவே
நிற்பாயோநல்வழி மானிடனே. 142

அன்னை தந்தைகளை தெய்வமென் றுதினம்
அடிமலரை நீ பூசைசெய் து
தன்னுயிர்போல்யாவும் பாதுகாத்துவேறு
தானமும்வேண்டுமோ மானிடனே. 143
தேகியென்றேயுன்றன் வாசல்வந்தவர்க்குத்
தேன்மொழியாலே யுபசரித் து
நீ நயபோசன மாதியவர்க்கீந்தால்
நேராது நரகம் மானிடனே. 144
பொருமைவஞ்சனை வையாதேசற்று
பொய்யாணைசத்தியம் செய்யாதே
ஆறுதகோபத்தி லேறுதேகொடு
ஆசாபாசம று மானிடனே. 145
மூத்தோர்சொல்கிஞ்சிற்றுந் தள்ளாதேகன
மூர்க்கமாசீறியேவிள்ளாதே
நாஸ்திகனென்று நீ பேரெடாதேதினம்
நாதனைப்போற்றுவாய் மானிடனே. 146
ஆசைவார்த்தைகளைச் சொல்லாதேசற்றும்
ஆணவம்கொண்டுநீ நில்லாதே [ஞல்
பேசிடும்வார்த்தைகள் தாழ்மையாய்ப்பேசி
பெருமைவேறுண்டோ மானிடனே. 147
அடுத்துக்கெடுத்துப்பொருள்களைத்தேடி
அங்குமிங்குமாக வைத்துவிட்டு [யே

படுத்துவியாதியால் துன்பப்படுகின்ற
பாக்கியம்பெற்ருரே மானிடனே. 148

மோசங்கள்செய்து பணங்களை யொக்கமாய்
மூட்டையாய்க்கட்டியே வைத்துவிட்டு
காசமுங்குஷ்டமுங் கண்டுமறிந்திட
கண்டபலனிது மானிடனே. 149

துன்பத்தினுலே நடந்தபின்பங்கே
சுற்றியேநின்றவன் பற்றியபின்
இன்பமாய்த்தின்று சுகித்துவிருக்கின்ற
இயல்பைகண்டறி மானிடனே. 150

நாறவாயன்மிக பாடுபட்டபொருள்
நல்வாயன்தின்று தானழித்தான்,
கூறும்பழமொழி பொய்யல்லவேயிதை
கூர்மையாய்க்கண்டறி மானிடனே. 151

கண்ணுக்குக்கண்ணுக நன்மைதுன்மைமிக
காட்டுமப்பா துன்பம் வாட்டுதப்பா
எண்ணியறிந்து நடந்துகொண்டால்வினை
ஏதும்வருகாதே மானிடனே. 152

நீர்மேற்குமிழிபோ லிக்காயம்
நில்லாதுபோய்விடு மாயமதாய்
பார்மீதிலேயாவும் சதமென்றேயெண்ணி நீ
பாராதேபோய்விடு மானிடனே. 153

எண்சாணளவுள்ள ஊத்தைக்கூடுகண்டு
நில்லாமல்வாழுமே பூச்சிக்கூடு
மண்ணிலதைச் சதமென்றுதினமும்
வம்புகள்செய்யாதே மானிடனே. 154
பெற்றாரும்பெண்டு மிருந்துமென்னமிக
பிள்ளையுறவு மிருந்துமென்ன
உற்றாரும்மற்றோ ரிருந்தாலுமிந்த
உயிர்க்குதவியோ மானிடனே. 155
அரியும்சிவனு மூன்றனுள்ளேபுகழ்
ஐந்துபூதங்களு மூன்றனுள்ளே
தெரிந்துகொண்டா லிதை டவேறான,
பெருமையில்லை மானிடனே. 156
ஜாணளவான வயிற்றுக்குநாடோறுஞ்
சஞ்சலமோடுபொருள் தேடுகிறாய்
வீணல்லவோ நபக்கொன்றுவதுமில்லையே
வேதனடிபணி மானிடனே. 157
நாயுநரிக்கோவிக் காமினைத
நம்பிதினந்தினம் பேசுகிறாய்
வாயுமனமொடு நாயமுமொத்துநீ
வந்திப்பாயீசனை மானிடனே. 158
பணத்தைமலைபோல் சேர்த்தாலும்
பட்டாடைரத்தினஞ் சேர்த்தாலும்

பிணத்தின்மேலேமுழம் துண்டுபோட்வும்
பிரியங்கொள்ளாரே மானிடனே. 159
தாயுந்தகப்பனும் வீடுமட்டில்செந்த
தமையனுதியோர் சுடுகாடுமட்டில்
ஆயுளிலதேடிய பாவபுண்ணியங்கள்
அக்கரைமட்டும்பார் மானிடனே. 160
கொட்டுமுழக்கமு மூருமட்டிலுயர்
கோத்திரம்வாழ்க்கையோ நாடுமட்டில்
கட்டுடனெமன்கைமிலகப்படும்போது
காசுக்குமாகுமோ மானிடனே. 161
பேச்சும்வீடுவிந்த் மண்மீதிலேநாம்
பெரியோராவமோ விண்மீதிலே
மூக்குபோகுமுன் பாவத்தைவேண்டினுல்
முத்திக்குபாத்திரன் மானிடனே. 162
பிரட்டுமுரட்டு மாந்தர்க்குள்ளேயாவி
பிரிந்தவருத்த நரகினிலே
உரத்திலன்போடு நாதன்பதத்தைநீ
ஊக்கமாய்ப்போற்றுவாய் மானிடனே. 163
சூரியன்சந்திர ளக்கினியால்வீசி
சுழற்றுங்காற்றோடு விண்ணுமல்ல
நீருமண்ணுங்கல்லு புல்லுமல்லதேவன்
நிலையேதுரைப்பாய் மானிடனே. 164

பொன்வெள்ளிசெமபு மரும்புமல்லபேசா
பொம்மையும்பூத மிருகமல்ல!
வுன்பார்க்குமன்பனுய் நிற்குமிப்பாரில்
றிவாயேநல்ல மானிடனே. 165
பூவில்மணம்போல் நிறைந்தோரைமறை
போதலையாண்டெண் ணவியன்றப்பா
சாவுபிறப்புமே யில்லானப்பாலவன்
சரணம்வேண்டிடு மானிடனே. 166
எள்ளினிலெண்ணெய்போல்நிற்போனப்பா அதை
எண்ணுர்க்குத்துன்பமே
எவ்வாமறைகளுஞ் சொல்
இறைஞ்சிப்போற்றுவாய் பா
மு பாலுமப்பாலுந் தாண்டும
மூவரும்யாவரும் தேடியப்பா
இப்பாழுங்காய மழியுமுன்ன
ஏத்திச்சுகம்பெறு மானிடனே
நெற்றிநடுவினி லுற்றத
நினைக்கிலற்புத மேவும
பற்றிப்பணிந்திடி லுன்
த்தனும்போற்றுவா
பசாமவுனமா புள்ள
மைசொல்லவே

ஆசாபாசமற்று நிறைபதப்பா அதை
யண்டுவாயென்று நீ மானிடனே. 170

ஆடும்மனக்குரங்கை யடக்கி அதி
ஐந்துவழியுஞ் சொல்லாமல்
நீடும்படிசெய்து போற்றி நின்றால்பாவம்
...லா தகண்டறி யானிடனே. 17[illegible]

...ன்றிரண்டுமூன்றுமைந்துமென்பார் நல்ல
...ராறுமெட்டான மந்திரமென்பார்
வெற்றிதருங்குரு பாதத்தையண்டி நீ
... ...றி மானிடனே. 172

...திருப்பாரப்பா நன்றாய்
...கள் மண்மீதிலே
...ணில் நீர்பூத்ததுபோல்
...ர்கள் மானிடனே. 73

...ர் நீர்போலும்புளி
...றைடோலும்
...பெரியோர்களவரைப்
...மானிடனே. 74

...தான்வாழி அந்த
...வாழி
...ானவாழி இதைக்
...வாழி. (முற்றிற்

...000. (29-10-49)